**ஹொரன பிரதேச சபை**

**களுத்துறை மாவட்டம்**

**---------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 ஆகஸ்ட் 15 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஆகஸ்ட் 08 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2017 செப்டம்பர் 29 ஆந் திகதியன்று சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதன உதவு தொகை ரூபா 17,914,269 ஆகியபோதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 34,219,346 ஆகக் காட்டப்பட்டமையால் ஆண்டிற்கான மூலதன உதவு தொகை ரூபா 16,305,077 அதிகரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருவாய் நிதிக் கூற்றுக்களில் காட்டப்படாததுடன், முன்னைய ஆண்டிற்கெனப் பெறப்பட்ட முத்திரைக் கட்டணமாகிய ரூபா 28,697,542 மீளாய்வாண்டிற்கான வருவாயாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான ஆயுர்வேத மருத்துவ வழங்கற் செலவினம் ரூபா 150,000 அதிகரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கடன் அடிப்படையில் அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2011 ஆம் ஆண்டில் பெறப்பட்ட அப்பியாசப் புத்தகங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,735,320 தொடர்பாகக் கடன் கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால், கடன் கொடுத்தோர் தொகை ரூபா 1,735,320 குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 1,735,320 அதிகமாகவும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 29,401,672 கூட்டுத் தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 10,485,433 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டினது மீண்டுவரும் வருவாயிலும் கூடிய செலவினம் ரூபா 43,597,495 ஆகும். இதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் ரூபா 33,112,062 அதிகரிப்பு தென்பட்டது.

வருவாயில் ரூபா 35,343,873 அதிகரிப்பும் செலவினத்தில் ரூ3,231,811 அதிகரிப்பும் நிதிப் பெறுபேற்றின் ரூபா 33,112,062 அதிகரிப்புக்கான பிரதான காரணிகளாகும்.

## 2. வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய் உள்ளவாறான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| (i) | தீர்வையும் வரியும் | 14,497 | 12,078 | 4,583 |
| (ii) | குத்தகை வாடகை | 1,994 | 1,901 | 93 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணம் | 916 | 916 | - |

## 2.2 தீர்வையும் வரியும்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 6,432,198 நிலுவை இருந்ததுடன், ஆண்டின்போது அதில் 68 சதவீதமான ரூபா 4,342,873 அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட தீர்வையும் வரியும் ரூபா 10,394,286 ஆகும் ஆண்டின்போது அதில் 77 சதவீதமான ரூபா 7,976,219 அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான தீர்வை வரி வருமான நிலுவையான ரூபா 4,507,492 தொகையில் 767 கூறுகளில் 01 முதல் 03 ஆண்டுகள் வரையான ரூபா 1,079,067,682 கூறுகளில் 03 முதல் 05 ஆண்டுகள் வரையான ரூபா 1,122,294,542 கூறுகளில் 05 முதல் 10 ஆண்டுகள் வரையான ரூபா 1,200,208,257 கூறுகளில் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 42,771 என்பன உள்ளடங்கியிருந்தன.

## 2.2.3 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்திலிருந்த நிலுவை ரூபா 107,966 ஆகும். ஆண்டின்போது 31 சதவீதமான ரூபா 33,581 அறவிடப்பட்டமையால் மேலும் ரூபா 74,385 மீதியானது அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------------

### 3.1 செயற்பாட்டு / முகாமைத்துவ வினைத்திறமையின்மை

-----------------------------------------------------------------------------------------

(அ) வங்கி நடைமுறைக் கணக்கான 041-1-001-5-1069561 இலக்கத்தையுடைய கணக்கினது 2016 டிசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்கும்போது வைப்பிலிடப்பட்டுத் தேறாதிருக்கும் காசோலையாக 2017 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட நிலையான வைப்பு மீதியாகிய ரூபா 15,000,000 உள்ளடக்கப்பட்டு 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டு மீதி எதிர்மறையாவது தவிர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 49 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ஊழியர் பிணைப்பணமான ரூபா 80,000 முதலீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) தானாக இயங்கும் விதத்தில் ரூபா 258,350 செலவில் பழுது பார்க்கப்பட்ட மின் பிறப்பாக்கியை அவ்வாறு செயற்படுத்தக் கூடியவாறான விதத்தில் பாவனையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) சபைக்குச் சொந்தமான வெலபடவத்தப் பிரிவு, போறுவேதன்ட, புவக்வத்தை அல்லது பண்டாரவத்த என அழைக்கப்படுவதுமான பிரிவு, கனத்தவத்த பிரிவு ஆகிய காணிகளதும் அவற்றிலுள்ள கட்டிடங்களதும் உரித்தை வெளியிடுவதற்கான உரித்துறுதி மற்றும் உரித்துறுதிக் கூற்று சபையிடம் இருக்கவில்லை.

(உ) ஹொரன சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தினூடாக நடாத்தப்படும் சுகாதார சிகிச்சை நிலையத்தில் கலந்து கொள்ளும் சபையைச் சேராத 13 சிகிச்சை தொழிலாளர்களுக்குச் சபையால் ரூபா 2,354,450 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 3.2 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------------

(அ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்கான உப விதிகள் ஏற்படுத்தப்படவில்லை.

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவத்துக்குச் செலவாகும் கிரயத்தை ஈடு செய்வதற்கான கழிவுப் பொருள் வரி ஏற்படுத்தப்படவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருவாய் நிர்வாகம்

(இ) பதவியணி முகாமைத்துவம்

(ஈ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு